[25th January 1972

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அபராதம் செலுத்தும் வரையில் கழுதைகள் என்ன செய்யப்பட்டன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கழுதைகளாக இருந்தாலும் வாயில்லாப் பிராணிகள். அரசாங்கம் அவற்றிற்குத் தீனி போட வேண்டிய அவசியத்திற்கு ஆளாகியிருக்கிறது.

Prices of Edible Oils

* 29. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) whether the Government are aware of the rise in prices of edible oils in the State; and

(*b*) if so, the details thereof?

உட்கொள்ளத்தக்க எண்ணெய்களின் விலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்தில் உட்கொள்ளத்தக்க எண்ணெய்களின் விலை உயர்ந்துள்ளதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) உணவிற்குப் பயன்படும் எண்ணெய் வகைகளின் விலை இம்மாநிலத்தில் பொதுவாக இறங்குமுகமாகவுள்ளது.

(இ) இவ்வினா எழவில்லை.

Craft Instructors

* 30. *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) the number of Craft Instructors in Industrial Training Institutes in Tamil Nadu who possess National Apprenticeship Certificates (1961 Act);

(*b*) the number of such Instructors whose services have not yet been regularised as on date ; and

(*c*) the reasons therefor?

கைத் தொழில் ஆசிரியர்கள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில், தொழிற் பயிற்சிக் கூடங்களில் உள்ள தேசியத் தொழில் பயிலுநர்ச் சான்றிதழ்கள் (1961-ஆம் ஆண்டுச் சட்டம்) பெற்றுள்ள கைத் தொழில் ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ன ?

25th January 1972]

(இ) நாளது தேதியன்றுள்ளபடி, பணி முறைப்படுத்தப் படாத அத்தகைய ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ன?

(உ) அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) நாற்பத்தைந்து.

(இ) இருபத்தெட்டு.

(உ) இந்த இருபத்தெட்டு தொழிற்பயிற்சியாசிரியர்களின் கல்வித் தகுதிகள் இப்போதுள்ள விதிகளுக்கிணங்க இல்லையாதலால் அவர்களது பணிகளை முறைப்படுத்த முடியவில்லை. இருந்த போதிலும் வேலைவாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநரிடமிருந்து செயற்குறிப்புகள் வரப்பெற்றதும் அவர்களுக்குச் சாதகமாகத் தொடர்புடைய விதிகளைத் தளர்த்தி அவர்களுடைய பணிகள் முறைப்படுத்தப்படும்.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, இந்த தேசிய தொழில் பயிலுநர் சான்றிதழ் பெற்றவர்களுக்கு விசேஷச் சலுகை கொடுக்க வேண்டுமென்று அரசாங்கதுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருப்பதாக நினைக்கிறேன். அப்படியிருக்க, இவர்களை நியமனம் செய்வதில் என் காலதாமதம் ஏற்பட வேண்டும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இந்தப் போஸ்டுக்குள்ள தகுதியிலிருந்து வேறுபட்ட தகுதி பெற்றிருக்கிறார்கள் இவர்கள். அதாவது, நேஷனல் அப்பிரெண்டிஸ் செர்டிபிகேட். அவசரத் தேவைக்காக 1966-67-ல் 45 பேர்களைப் போட்டார்கள். இருக்கிற விதிகளைத் தளர்த்தித்தான் அவர்களை 'ரெகுலரைஸ்' செய்ய முடியும். அப்படி 17 பேர்களுக்குச் செய்யப்பட்டிருக்கிறது. மீதிப் பேர்களுக்கு 'ப்ரபோஸல்' அனுப்பும்படி, டைரக்டர் ஆஃப் எம்ப்ளாய்மெண்ட் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

Tamil Nadu Cement Factory, Alankulam

* 31. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether any preference in providing employment is given to those farmers who have lost their lands due to acquisition of the lands for the Tamil Nadu Cement Factory, Alankulam; and

(*b*) if so, the number of such persons recruited so far?

தமிழ்நாடு சிமின்ட் தொழிற்சாலை, ஆலங்குளம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஆலங்குளம் தமிழ்நாடு சிமின்ட் தொழிற்சாலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்த காரணத்தால் நிலத்தை இழந்த விவசாயிகளுக்கு அத்தொழிற்சாலையில் வேலையளிப்பதில் சலுகை காட்டப்படுகிறதா?